15th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓவரால் முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். நான் நேற்று பேசும்பொழுது மாவட்டத்திற்கான ஓவரால் ஆவரேஜ் 35-க்கு மேற்பட்டிருந்தாலும் திருப்தி அடையலாமென்று கூறினேன். அதற்குட்பட்டு கல்வித் துறை அதிகாரிகள் வேண்டியதைச் செய்வார்கள்.

திரு. எஸ். மாதவன் : ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் காரணம் காட்டி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், குறிப்பாக சிறு கிராமங்களில் பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த மாதிரி தவறுகள் நடைபெற்றால் கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

Deposits (refund)

* 246 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that inordinate delay is being caused in the matter of refund of deposits; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government are not aware of any inordinate delays in sanctioning refunds of contributions deposited towards building works under the Local Development Works Programme. If specific instances of inordinate delays are brought to the notice of Government, they will be looked into and the situation remedied.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி மாவட்டத்தில் காரிய மங்கலம் பெண்ணாகரம் போன்ற இடங்களில்

Mr. SPEAKER : If any specific case is brought to the notice of the Government, it will be looked into.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரீபண்டுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் சரியாக அந்த மனு பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தாமதம் ஏற்படும். மேலும், ரீபண்டு காலாவதியாகிவிட்டால், அதற்கு ஒரு ப்ரொஸீஜர் இருக்கிறது. அதன்படி அரசாங்கத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

Evening colleges

* 247 *Q.*—Sri M. KALYANASUNDARAM and Sri RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open evening colleges; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[15th March 1963

திரு. இராம. அரங்கண்ணல் : மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் அவசியமானவை என்று கோதாரிக் கமிட்டியாயினர் முடிவு தெரிவித்துள்ளனர். இப்பொழுது கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் நடக்கின்றன. அதைப் போல் சென்னை மாநகரில் பரீட்சார்த்தமாக மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் திறப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி சென்னை பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசிக்கப்பட்டது. அவ்வாறு மாலைநேர வகுப்புகள் மூலம் நல்ல முறையில் கல்வி போதிப்பது உகந்ததாக இருக்காது என்று கருதப்பட்டது. அதனால் மேலும் பரிசீலிக்கப்படவில்லை.

Elliot Beach Area

* 248 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware of the fact that a lot of rubbish and garbage of the Madras City are carried in trucks and heaped regularly in the Elliot Beach area, Adyar, polluting the healthy atmosphere thereat?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எலியட் பீச் பகுதியில் சில சமயங்களில் தவிர மற்றப்படி வழக்கமாகக் குப்பை கொட்டுவதில்லையென்றும், இப்பொழுது அங்கு குப்பை கொட்டுவதை நிறுத்திவிட்டு, வேறு இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தென்றும் சென்னை மாநகராட்சிக் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

திரு. வை. சங்கரன் : மொபஸில் முனிசிபாலிடிகளில் இந்தக் குப்பைகளை கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு உபயோகிப்பது போல கார்ப்பரேஷனிலும் செய்வதற்கு சர்க்கார் யோசனை கூறுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எலியட் பீச்சுக்கு அருகில் பள்ளங்கள் இருந்ததால் அதை நிரப்புவதற்காக இந்தக் குப்பைகள் அங்கே போடப்பட்டது. இப்பொழுது எதிர்ப்பு தெரிவித்த பிறகு, நிறுத்தியாகி விட்டது.

திரு. ஆர். ரங்கசாமி : இந்த குப்பை டெப்போக்கள் வெகு காலத்திற்கு முன்பு ஏற்பட்டவை. இப்பொழுது அபிவிருத்தி அடைந்து வரும் நகரங்களிலே, நகர எல்லைக்கு வெளியே இந்த டெப்போக்களை அகற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குப்பையிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு வேறு இடம் பார்த்திருக்கிறோம். எலியட் பீச்சில் குப்பையைக் கொட்டுதல் சம்பந்தமாகத்தான் இந்தக் கேள்வி எழுகிறது.

கல்லூரியில் " ஷிப்டு " முறை

*** 249 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி** சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-64 கல்வியாண்டில் கல்லூரி புதுமுக வகுப்பில் தேவையான இடங்களில் ஷிப்டு முறையினை வைப்பதற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The University of Madras is the competent authority to permit the adoption of shift system in colleges. Proposals for starting evening classes for girls for Pre-University Course in the Government College, Kumbakonam, are under consideration of Government.